பக்கங்கள் ஆறு

STAFF COPY NOT FOR SALE

Registered as a Newspaper

'பழமொழிச் செல்வரி'ன் பல்சுவைப் படைப்பு!
'மக்கள் வாழ்வில் படிமொழி'
தொகுதி நூல்!
விலை: 25/- ரூபா
ஆச்கியோன்:
'பழமொழிச் செல்வர்'
'சச்சி மாஸ்ரர்'
கிடைக்கும் இடம்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

பழமொழிக் கட்டுரைக் கதம்பம!
'பழமொழிச் செல்வர்'
சச்சி மாஸ்ரரின்
'மக்கள் வாழ்வில் பழமொழி'
தொகுப்பு நூல்
விலை: 25/- ரூபா
கிடைக்கும் இடம்:
பூ பாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆு ஐப்பசி மீ 17 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ற.அவ்வல் பிறை 21 ( 02 – 11 – 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 225

# பன்னலைபடை முகாம்மீது அதிரடித்தாக்கு!

# ஆயுதக் களஞ்சியம் சூறை!! தானியங்கித் துப்பாக்கிகள் ரைபிள்கள் அபகரிப்பு

## 4 ராணுவத்தினர், 4 தீவிரவாதிகள் பலி!

கொழும்பு, நவமபர் 2

வடமேற்கு மாகாணத்தில் உள்ள பன்னலை இராணுவப் பயிற்சி முகாம் மீது தென்பகுதி தீவிரவாதிகள் குழு ஒன்று நேற்று அதிகாலை அதிரடித்தாக்குதல் ஒன்றை நடத்தியது அங்கிருந்த ஆயுதக் களஞ்சியம் சூறையாடப்பட்டது ரைபிள்கள், தானியங்கித் துப்பாக்கிகள் உட்பட சுமார் 450 ஆயுதங்களை தீவிரவாதிகள் அபகரித்துச் சென்றனர்.

சுமார் 75 பேர் கொண்ட தீவிரவாதிகள் குழு ஒன்று நடத்திய இந்தத் தாக்குதலில் நான்கு இராணுவத்தினரும் நான்கு தீவிரவாதிகளும், சிவிலியன் ஒருவரும் உயிரிழந்தனர்.

நேற்று அதிகாலை 1.45 மணிக்கு இந்த அதிரடித் தாக்குதல் இடம்பெற்றது

தாக்குதலை நடத்தியவர்கள் படைமுகாமிலிருந்த ஆயுதக் களஞ்சியத்தை உடைத்துத் திறந்து அங்கிருந்த ஆயுதங்களை அள்ளிச் சென்றனர்.

தீவிரவாதிகள் ஆயுதங்களை வாகனங்களில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளையிடப்பட்ட ஆயுதங்களின் விவரம்

கொள்ளையடிக்கப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:—

★ ரி 56 ரக ரைபிள்கள் — 21
★ .33 ரக ரைபிள்கள் — 178
★ மெஷின் கன்கள் — 9
★ ஷெட்கன்கள் — 242
★ ரி—56 ரைபிள்களுக்குத் தேவையான நாற்பது ஆயிரம் சுற்று ரவைகள்.
★ ஷொட் கன்களுக்குத் தேவையான 20 ஆயிரம் சுற்று ரவைகள்

இலங்கையில் ஒரு தாக்குதல் சம்பவத்தில் மொத்தமாக 450 ஆயுதங்கள் கொள்ளையடிக்கப்பட்டது இதுவே முதல் தடவை என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## கணிசமான எண்ணிக்கை ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு நவம்பர் 2

பன்னலை படைமுகாம் தாக்குதலின் போது கொள்ளையிடப்பட்ட ஆயுதங்களில் கணிசமான எண்ணிக்கை மீட்கப்பட்டிருப்பதாக கொழும்பில கூட்டுப்படைத் தலைமையகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

கொள்ளை இடம்பெற்ற பகுதிகளில் கடும் தேடுதல் வேட்டையில ஈடுபட்டிருக்கும் பாதுகாப்புப் படையினர் இந்த ஆயுதங்களை மீட்டதாக அவர் மேலும் சொன்னார்.

ரி—56 ரக இயந்திரத் துப்பாக்கிகளும், 35 ரைபிள்களும், தோட்டாக்கள் நிரம்பிய பெட்டிகளும், தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் 4 வான்களும் 8 மைல் சுற்று வட்டாரத்திற்குள் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (உ-எ)

## தகவல் தருவோருக்கு ரூ. 15 லட்சம் சன்மானம்

பன்னலை இராணுவமுகாம் தாக்குதலின் போது கொள்ளையிடப்பட்ட ஆயுதங்கள் பற்றிய துப்புக்களைத் தருவோருக்கு 15 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

தகவல் தருபவர் பற்றிய விவரங்கள் மிகவும் இரகசியமாக வைக்கப்படும் என்றும் அரசு அறிவித்திருக்கிறது.

தாக்குதல் சம்பவத்தை அடுத்து பன்னலை படைமுகாம் அமைந்திருக்கும் பிரதேசத்தில்—குருநாகல், கம்பஹா மாவட்டங்களில் உள்ள ஒன்பது உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவில்—48 மணிநேர ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது

நேற்றுக் மாலை 4மணிக்கு பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு நாளை மாலை 4மணிவரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

இப்பகுதிகளை பாதுகாப்புப் படையினர் சல்லடை போட்டுத் தேடி வருவதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கன. (உ-எ)

### யாழ் பல்கலைக்கழக

## கலைப்பீட மாணவர் நேற்று பகிஷ்கரிப்பு

யாழ், பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர்கள் நேற்று தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

கடந்த வருடம் இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த கலைக்கூடக் கட்டடங்களை நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்பு விரிவுரைகளுக்குப் பயலபடுத்தக்கூடியதாக திருத்தித் தருவதாப் பல்கலைசழக நிர்வாகம் தமக்கு உறுதி அளித்து இருந்ததாகவும்—

இந்தஉறுதிமொழியை நிர்வாசம் காப்பாற்றத் தவறியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இந்தப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

மாணவர்கள் இனறு விரிவுரைகளுக்கு சமுகமளிப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார், (ஒ-5)

## மீன்பிடிக்கத் தடை வல்வைக் கடலில்

வடமராட்சி, நவ. 2

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு நேற்று முன்தினம் முதல் தடைவிதிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது

முன்னர் இப்பகுதியில் பகல் நேரத்தில் மீன் பிடிக்க அனுமதி வழங்சப் பட்டிருநதது தற்போது அதற்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது

இந்தத் தடை உததரவை மீளாய்வு செய்யுமாறு கோரி வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி பொலிகண்டிப் பகுதி மீனவர்களின் சார்பில் இந்தியப்படையினரிடம் மனு ஒன்று சொடுக்கப் படடிருப்பதாகவும் தெரியவருகிறது. (உ-160)

## இன்று யாழ். கோட்டையில் அரச அதிகாரிகள் மாநாடு

யாழ்ப்பாணம் நவ 2

வடபகுதியில் உள்ள அரச அலுவலகங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கான மாநாடு ஒன்று யாழ். கோட்டையில் இன்று நடைபெற இருப்பதாக அறிவிக்கப் படடுள்ளது.

இந்த மாநாட்டில் படை அதிகாரிகளும் பங்குபற்றுவர் எனத் தெரிவிககப்படுகிறது.

இன்றைய மாநாட்டில் பங்குபற்றுமாறு யாழ். மாவட்டத்தில் உள்ள அநேகமான அரச—திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள அதிகாரிகளை காலை 9.15 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமுகம்தரும்படி கோரப்பட்டிருக்கிறது. (உ-9)

### சுபநேரம்

02- 11 – 1988
ஐப்பசி 17
புதன்கிழமை
சுபநேரம்:– 4-34முதல் 6-04வரை
ராகுகாலம்:– 12 04முதல் 01-34வரை

## தேர்தல் ஆசன ஒதுக்கீடு; ஜே. வி. பியுடன் இணக்கா?

கொழும்பு நவ 2

கடந்தஇரண்டு தினங்களாக மக்கள் விடுதலை முன்னணியுடன் (ஜே. வி. பியுடன்) நடத்தப்பட்ட பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஏழு கட்சி கூட்டணி வட்டராங்சள் தெரிவித்தன.

நாடாளுமன்றத் தேர்தலில் மொத்த ஆசனங்ளில் 32 சதவீதத்தை மக்கள் விடுதலை முன்னணியினருக்கு ஒதுக்குவது குறித்து பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த உத்தேச உடன்பாட்டின் கீழ் சுதந்திரக் கட்சிக்கு 42 சதவீதமும்—

ஏனைய 6கட்சிகளுக்கும் மொத்தமாக 26 சதவீதமும் தொகுதிகள் பங்கீடு செய்யப்படும் என்று அறியப்படுகிறது. (ஒ-எ)

## 181 தபால் பொதிகள் இன்று யாழ். வரும்

வடபகுதிக்கான தபால்பொதிகள் நேற்று ரயில் மூலம் வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்டன.

இவற்றுள் 181 தபால் பொதிகள் யாழ். தபாலகத்துக்கு வந்து சேர வேண்டியவை என்றும்—

இவை இன்று யாழ்ப்பாணம் வந்து சேரும் எனவும் தபாலகவட்டாரங்கள் தகவல் தந்தன

கடந்த சிலநாட்களாக நாடெங்கிலும் ரயில் சேவை தடைப்பட்டிருந்ததன் காரணமாக தபால் பொதிகள் கொழும்பில் தேங்கிக்கிடந்தன என்பது தெரிந்ததே (ஒ 10)

## தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு எதிரணியிடையே இணக்கம்

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஏழு அரசியல் கட்சிகளுக்கு இடையே இணக்கம் ஏற்பட்டுள்ளதாக ஜனநாயகத் தொழிலாளர் சாங்கிரஸ் தலைவர் ஏ அஸீஸும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம் எச் எம் அஷ்ரபும் தெரிவித்தனர்.

★ தமிழர் பிரச்சினைகுத தீர்வாக வடக்கு, கிழக்கில் தமிழ் மாநிலம் அமைப்பது.

★ முஸ்லிம்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற அந்தத் தமிழ் மாநிலத்தின் கீழ் முஸ்லிம்களுக்குத் தனியான சபை ஒன்றை ஏற்படுத்துவது–

இந்த அடிப்படையில் ஏழு கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (ஒ-எ)

## உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள்யாழ்நகரில்

### ஆஸ்பத்திரிக்கு எயிட்ஸ் கருவி

யாழ்ப்பாணம். நவ. 2

உலக சுகாதார ஸ்தாபனத்தைச்சேர்ந்த இரு பிரதிநிதிகள்நேற்றுயாழ் நகருக்கு விஜயம் செய்தனர்.

திரு. ஹோப்லான்ட்,

[6 ஆம் பக்கம் பார்க்க]

### ரூ.1,000 நிவாரணம்

## வங்கிகள் மூலம் சனி முதல் வழங்குவதற்கு உத்தேசம

யாழ்ப்பாணம், நவ 2

இடம் பெயர்ந்தகுடும்பங்கள் மீளக்குடியமர்த்தலுக்கான ஆயிரம் ரூபா நிவாரணப் பணம் இலங்கை வங்கி, மககள் வங்கி ஆகிய வற்றின் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும்.

எதிர் வரும் சனிக்கிழமை முதல் இந்தப் பணத்தை வழங்குவதற்கு யாழ். இலங்கை வங்கி பிராந்தியதலைமை அலுவலகமும், யாழ். மககள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகமும் ஆலோசித்து வருகின்றன.

யாழ் மாவட்டத்தில் அரச வங்கிகள் யாவும் தற்போது வாரத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டியல்கள் வங்கிகளில்

மீளக்குடியமர்த்தலுக்கான நிவாரணக் கொடுப்பனவு சம்பந்தமான பட்டியல்கள் நேற்று வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உரும்பராய் மேற்கு கிராமசேவையாளர் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு யாழ் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கியிலும—

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுன்னாகம் கிழக்கு கிராம சேவையாளர்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு சுன்னாகம் மக்கள் வங்கியிலும் பட்டியல்கள் வைககப் படடுள்ளன.

கிராம சேவை அலுவலரின் பணிமனையிலுள்ள பட்டியலில் தமது தொடர்பிலக்கம் உள்ளவர்கள் அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் வங்கிக்குச்சென்று கொடுப்பனவு பற்றிய திகதியையும் மற்றும் விவரங்களையும் அறிந்து கொள்ளலாம். (உ-ஒ-10)

### முச்சந்தி முரளி



துப்பாக்கிகள் கூடக் கிடைச்சிருக்கிறதாலை அவையள் கூட ஆசனங்களைக் கேட்பினம்...... அப்ப ஏழு கட்சி எதிரணிக்காரருக்கு தொல்லையாத்தான் இருக்கப் போகுது எண்டு சொல்லுங்கோ......!

## வல்வையில் நேற்றுப் பேரணி

### கைதானோரை விடுவிக்கக் கோரி

வடமராட்சி, நவ 2

கடந்த திங்கட்கிழமை வல்வெட்டித் துறைப் பகுதியில் இடம்பெற்ற தேடுதல் வேட்டையின் போது கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி நேற்று பேரணி ஒன்று இடம்பெற்றது.

நேற்று நண்பகல் வல்வைச் சந்தியில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி உடுப்பிட்டி அமைதிப்படை முகாமில் முடிவுற்றது

பேரணியில் கலந்து கொண்டவர்கள் கைது செய்யப் பட்டோரை விடுவிக்கக் கோரும் சுலோகங்களைத் தாங்கியிருந்தனர்.

பேரணியில் கலந்து கொண்டோரின் பிரதிநிதிகளை; உடுப்பிட்டி பாதுகாப்புப்படை பொறுப்பதிகாரி முகாமிற்குள் அழைத்துச் சென்று பேசினார்.

சுமார் ஒருமணி நேரம் பேச்சுக்கள் இடம்பெற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நாடாளுமன்றில் இலங்கைப் பிரச்சினை!

புதுடில்லி, நவ. 2

இந்திய நாடாளுமன்றத்தின் குளிர்காலககூட்டத் தொடர் இன்று புதன் ஆரம்பமாகிறது.

இலங்கைப் பிரச்சினை உட்பட பல முக்கிய விஷயங்களை இக்கூட்டத தொடரில் எழுப்பப் போவதாக எதர்க்கட்சிகள் அறிவித்துள்ளன, (உ-எ)

## சுட்டுக்கொலை

யாழ். ஈச்சமோட்டை வீதியில் இளைஞர் ஒருவர் நேற்று மாலை 5மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ். அடைக்கல மாதா கோயிலடியைச் சேர்ந்த ஷெல்டன் ஹரிஸ் ஸ்ரீகாநதராஜா (வயது 20, என்பரே கொல்லப்பட்டவராவார். (ஒ-51)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல புத்தம் புதிய நிலையிலுள்ள 30 Sri Hiace LH-30 Model Van டீசல் உடன் விற்பனைக்கு உண்டு. Full Seated Cut Glass உள்ளது. முருகன் இல்லம் மையை கெரு. இருபாலைச்சந்தி, கோப்பாய். (C-718)

தளபாடங்கள். குளிர்சாதனப் பெட்டி, ஹோல் செற். Fan, விருந்தை செற் கட்டில் மெத்தை, கண்ணாடி மேசை, கசற் றேடியோ, சாப்பாட்டு மேசை, செற்றி குசன்கள் மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. No: 7. பண்டாரகுளம் மேற்கு வீதி நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் (7690)

மிகவும் நல்ல நிலையில் உள்ள நஷனல் கலர் 18" T. V உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S நாதன் 16/3 விதானையார் வீதி. ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (7692)

பாவித்த தளபாடங்கள் Show-Case, மேசை, கண்ணாடி மேசை உடன் விற்பனைக்கு உண்டு 75/1 பலாலி றோட், கந்தர்மடம் (7689)

உங்கள் உணவின் சுவையை மேலும் குழியூட்ட வட இந்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட 'வெள்ளைப் பூடு ஊறுகாய்' (Garlic Pickle) விற்பனைக்கு உண்டு. 300G போத்தல் 27/50 மட்டுமே வியாபாரிகளுக்கு விஷேச கழிவு உண்டு M G. M & Stores. 777. K.K.S Rd, Jaffna. (7636)

### வலம்புரிச் சங்கு

இல்லங்களில் இலட்சுமி ராஜ் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூஜை, ஆராதனைகளுக்கும் உகந்ததசிறந்த வலம்புரிச் சங்குகள் விற்பனைக்கு உண்டு. ஆகச் சிறியதன் விலை ரூ 100/ தொடர்பு: தாஸ், 188, புதுச்செட்டித்தெரு கொட்டாஞ்சேனை, கொழும்பு-13. (7360)

### நாய்களுக்கான மருந்துகள்

For Dogs Parvo Distember Rabies Vaccine Phillips vetzyme Tablets Shampoo, Flea Powder, Spray மற்றும் நாய்களுக்குத் தேவையான மருந்துகளை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம் Nallur Farm Centre C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர்ஒழுங்கை, நல்லூர். (7687)

### கோழிக்குஞ்சு விநியோகம்

3½ மாத GC பிறவுண் படு புதன்கிழமையும் Hisex Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள். சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் சறுப்பு சேவற்குஞ்சுகள் 4-11 88 வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா அன் பிறதர்ஸ். பிரம்படி, கொக்குவில். (7649)

Broiler இறைச்சிக் கோழிகள். பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள் சிவப்பு சேவற்குஞ்சுகள். Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் Hyline கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7686)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Christumpu Farm ஒருநாள Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் எமது ஸ்தாபனத்தில் 10-11 88 அன்று விற்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்ய விரும்புபவர்கள் சுஜேராஸ் 21, வேம்படி வீதியில் உள்ள எமது காரியாலயத்தில் பதிவு செய்யலாம். முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது தொகையாக வாங்குபவர்களுக்கு விசேஷ சலுகை வழங்கப்படும். C/ 672)

### இறைச்சிக் கோழி விநியோகம்

பிறிமா இன சிவப்பு, வெள்ளை ஒருநாள் பேட்டுக் குஞ்சும் புறொயிலர் மற்றும் சேவல் குஞ்சுகளும் 30-10-88 ல் இருந்து விநியோகிக்கப்படுகிறது. தேவைப்படுவோர் உடன் வரவும். M G.M Forage Stores. 208, 1st Cross St, Jaffna. (7635)

### தேவை

யாழ் நகரிலுள்ள லேத் வேலைத்தளத்திற்கு அனுபவமுள்ள ஓட்டுனர் உடன் தேவை. தகுதிக் கேற்ற சம்பளம் வழங்கப்படும். 341, மே/பா உதயன். (7643)

ரேடியோ. T V டெக், திருத்துபவர்கள் தேவை அனுபவம், நற்சாட்சிப் பத்திரம் முதலியவைகளுடன் விண்ணப்பிக்கவும் முழு விபரமும் தர வேண்டும் பரீட்சார்த்த சேவை வைக்கப்படும் 5, C/o உதயன், யாழ்ப்பாணம். (7662)

### மணமகன் தேவை

இந்து வேளாள 32 வயதுள்ள Stenographer (English) தகுதியுடைய மணமகளுக்கு மணமகன் தேவை. கிரகநிலை, சல்வி, விபரங்களுடன் தொடர்பு: 343 மே/பா உதயன், காரியாலயம். (7904)

### மணப்பெண்கள் தேவை

யாழ்ப்பாணம் இந்து வேளாள 34 வயதுள்ள B. Sc ஆசிரியருக்கு பட்டதாரி மணப்பெண்ணும் மாதம் 1000/ பெறும் 36 வயதுள்ள Business மணமகனுக்கும் ஓமானில் நிரந்தர உத்தியோகமுள்ள 33 வயது மணமகனுக்கும் அழகிய மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். யாழ்ப்பாணம். (7683)

### தவறிவிட்டது

S. கிருஷ்ணரின் 260481630V அடையாள அட்டை தெல்லிப்பழைக்கும் – யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் Miss. Sasikari, Manickavasagar M.P.C S. Ltd, Tellippalai யில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7903)

திருமதி பேள் ஜெகதுரராணி ஜெயவேந்திரன் ஆகிய நான் 3768 2427V அடையாள அட்டையையும் Bank Card ஐயும் தவறவிட்டுவிட்டேன். கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (7650)

### சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலெக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டுக்கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும் 'ஷப்ரு' சேவை பிரிவு. இல. 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலயவீதி, யாழ்ப்பாணம். (C/691)

### றோணியோ

தரமான றோணியோ பிரதிகளை (தமிழ்/ ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் ''ஷப்ரு'' சேவைப் பிரிவு இல: 19, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலய வீதி, யாழ்ப்பாணம். (C/692)

### திருத்திக் கொடுக்கப்படும்

உங்கள் சகல விதமான Radio T V Deck மற்றும் மின உபகரணங்களும் குறித்த தவணையில் சிறந்த முறையில திருத்திக் கொடுக்கப்படும் தொடர்பு- Nesta Electrical Works, 59, Station Road Jaffna. (7671)

### புதிய பிரிவு ஆரம்பம்

பொருளியல் 89 திரு உதயன். தேசிய வருமானம் சனி 05 11-88 மாலை 3 மணி (முதல் வகுப்பின் நேரம் மாற்றப்படும்) கணக்கியல் பங்குடைமை திரு சௌந்தி Ecalom Tuition Centre மனோகராச்சந்தி. யாழ்ப்பாணம் (7902

### THANKS

Thanks to the Sacred Heart of Jesus and St Jude for Favours Granted. Devi (901)

### தொழிற் கல்விகள்

(1) Telex Operators I. D. D - (P M. G) -இருபாலாரும்- (2) Radio Amaetures (Morce-Ship) ஆரம்பம் 31-10-1988 Keen Centre. Thirunelvely Junction. (7663)

### நற்சான்றுப் பத்திரம் வழங்க முடியாத நிலை

யாழ்ப்பாணம் நவ 2 கிராமசேவையாளர் பலரிடம் நற்சான்றுப்பத்திரம் வழங்குவதற்கான புத்தகம் இல்லை என்று கூறப்படுகிறது. (இ-10)

## விற்பனைக்கு

### மலிவு விற்பனை

முற்றிலும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு. பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மகமலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (7601)

### தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

நமுயண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

### தீபாவளி மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்!! (1-11-88 முதல் 9-11-88 வரை) புதிய டிசைன் ஸ்கேட், பிளவுஸ், பேபி சூட், கவுன்கள் பெரியோர், சிறுவர்களுக்குரிய ரெடிமெட் ஆடைகள் Fashion Garments 20 22, கடைச்சாமி வீதி, (Off Navalar Road) யாழ்ப்பாணம் (7682)

### காணி விற்பனை

தெல்லிப்பழை சட்டுவன் றோட்டில் அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில வீடுகட்டக் கூடிய இரண்டேகால் (2¼) பரப்புக் காணி பனையுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நாகலிங்கம் துரைசிங்கம், கோப்பாய் றோட், உரும்பராய் தெற்கு உரும்பராய். (7694)

---

உ
கணபதி துணை

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் திருவருளை முன்னிட்டு நிகழும் விபவ வருஷம் ஐப்பசி மாதம் 18 ஆம் நாள் (3-11-88) வியாழக்கிழமை காலை 9-48 மணி முதல் 10-10 மணி வரை உள்ள தனுலக்கின சுபமுகூர்த்த வேளையில

எனது குமாரன்
திருநிறை செல்வன்
**ரமேஸ்பாபுக்கும்**
சரவெட்டி
செல்வராஜா அவர்களின் குமாரி
திருநிறை செல்வி
**சுபதினிக்கும்**

எனது சிரேஷ்ட புதல்வி
**சுபதினிக்கும்**
யாழ்ப்பாணம்
சந்தப்பச்செட்டியார் அவர்களின்
திருநிறை செல்வன் குமாரன்
**ரமேஸ்பாபுக்கும்**

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் நிகழவிருக்கும் திருமணத்திற்கு சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி வை கந்தப்பச் செட்டியார்
வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி N செல்வராசா
நொத்தாரிஸ் ... வடக்கு,
சரவெட்டி.

(769 )

---

இன்று ஆரம்பம்

# DAY CLASS

**"இழையவியல்"**
BY
Mr. குணசீலன்
SCIENCE ACADEMY
(B M C க்கு முன்பாக) (7959)

---

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



**திரு. ஆறுமுகம் பாலசுப்பிரமணியம்**
[இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்]

தோற்றம் 13-12-1924 மறைவு: 14-11-1987

ஓராண்டு சென்றிடினும்
நெஞ்சங்களில் உம நினைவு நிலைத்திடும்
பொல்லாத காலன் அவன்
செல்லாமல் உம்மைக் கவர்ந்தான்
எம் நெஞ்சிருக்கும் வரைக்கும்
உம் நினைவிருக்கும் ஐயா!
உங்கள் ஆத்மசாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, மக்கள்
மருமக்கள், பேர பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

153. நாவலர் றோட்,
யாழ்ப்பாணம். (7858)

---

## மூன்றுவது ஆண்டு நினைவஞ்சலி



**ஆழ்வாப்பிள்ளை வல்லிபுரம்**
**இராசநாயகம் (திருவிளங்கப்)**
தும்பளை பருத்தித்துறை
(மலேரியாத் தடைப் பகுதி பொறுப்பு உத்தியோகத்தர்)

மலர்வு: 05 01-1919 உதிர்வு: 06-11-1985

பெற்று வளர்த்தெமக்கு
பெரு வாழ்வு தந்தவரே!
ஆண்டு மூன்றானாலும்
ஐயா! நின் அன்புடமை
மறப்போமோ! தெய்வமே!
மறை முதல்வன் திருவடியில்
மகிழ்வீரோ! தந்தையே!
உங்கள் பிரிவால் துயருறும்!

பழம் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
அன்பு மனைவி, மகன்மார், மகள், மருமக்கள், பேரர்கள், பேத்திகள்.
(7861)

---

சவூதி அரேபியாவுக்கு
# உடனடி வேலைவாய்ப்பு

| | சம்பளம் |
|---|---|
| 40 பேர் கனரக சாரதிகள் (H. V Drivers) | 750 S.R |
| 400 பேர் கிளீனர்ஸ் | 400 S.R |

வயதெல்லை சாரதிகளுக்கு 24 - 45 வரை
கிளீனர்ஸ் வயதெல்லை 21 - 45 வரை

பத்து (10) நாட்களுக்குள் பயணம். கடவுச்சீட்டுடன் மூன்று கடவுச்சீட்டு சைஸ் போட்டோக்கள். உடன் தொடர்பு கொள்ளவும்.

# T. V. TRAVELS & TOURIST

BROWN ROAD,
(Railway Station Front)
KOKUVIL,
(C/719)

---

# BECON

156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# A/L 89

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

## பொருளியல்

S. வரதராஜன்

11.00–12.00 பிரிவு I: தேசிய வருமானம்
1.00 – 2.00 பிரிவு II: தேசிய வருமானம்,

## அளவையியல்

S. S. மனோகரன்

11.00 — 12.00 பகுதி : II

ஆரம்பம்:
**05-11-1988 சனி**

(C 720)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



**திரு. இராசையா கந்தசிவம் (சாமி)**

மலர்வு: 29-12-1948 உதிர்வு: 04-10 1988

எங்கள் அனைவரது உள்ளத்திலென்றும் நீங்காது இருக்கும் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் வாடி நிற்கும்:
மனைவி, தந்தை, தம்பி,
சகோதரர், சகோதரி, மருமக்கள்.

கேவில்,
இடைக்காடு. (7693)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பு

லிபியா:

1. H.V DRIVERS
2. PLUMBERS
3. STEEL ERECTORS
4. FIBRE GLASS TECHNICIAN
5. PIPE FITTERS
6. INSULATION TECHNICIANS/FITTERS
7. REPAIR TECHNICIAN FOR GENERATORS/WELLING MACHINES
8. MECHANICS For AIR COMPRESSORS
9. SPECIALIST For ELECTRICAL MOTOR CONTROL SYSTEM

சம்பளம்:
8 மணித்தியாலத்திற்கு
9 – 10,000 ரூபா வரை

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

கொழும்பில்:
18 1/4 முதலிகே மாவத்தை,
கொழும்பு.
(7851)

யாழ்ப்பாணத்தில்;
ந.பாஸ்கரன்,J.P
இந்திராணி ஏஜென்சி
நெல்லியடி,
கரவெட்டி.



வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

**Computer Programming and Data Processing in Basic Language**

கட்டணம்: 950/-
(இரு பகுதிகளாகச் செலுத்தலாம்)

பயிற்சிக் காலம்: 2 மாதம்

ஆரம்பம்: **5- 11- 88**
(சனி, ஞாயிறு வகுப்புகள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM Compatible) சம்பியூட்டர் இல வழங்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோர் அருகாமை)
(C/708)


### பற்றாக்குறை நீங்கியது

புங்குடுதீவு நவ 2

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் பற்றாக்குறை நீங்கியுள்ளது.

ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் சென்ற பல வருடங்களாக ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவர்கள் பூரண கல்வியைப் பெற முடியாமல் இருந்தது.

தற்போது இந்நிலைமை நீங்கியமைக்கு வித்தியாலய அதிபரும், பெற்றோர்களும் யாழ் கல்விப்பணிமனையில் கடமையாற்றும் உயர் அதிகாரிகளைப் பாராட்டுகின்றனர்.

(சி 131)

### யாழ் விக்ஞ ரியூஷன் நிறுவனம்
## இலவச பயிற்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம் நவ 2

இவ்வாண்டு ஜீ சி ஈ. பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களின் நலன் கருதி யாழ். விஞ ரியூஷன் நிறுவனம் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இலவச பயிற்சிப் பரீட்சை ஒன்றை நடத்த முன்வந்துள்ளது.

ஜீ சி ஈ. பழைய புதிய பாடத்திட்டங்களில் தோற்ற இருக்கும் சகல மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்றலாம்

இப்பரீட்சையை நடத்த விரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் இம்மாதம் 11 ஆம் திகதிக்கு முன்பதாகத் தம்மிடம் பதிவு செய்து கொள்ளும்படி விக்ஞ ரியூஷன் நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச)

### புனரமைப்பு

குன்றும் குழியுமாகக் காட்சி தந்த பெருங்காடு — இருப்பிட்டி பிரதான வீதி செப்பனிடப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து நீண்டகால இடைவெளிக்குப்பின் இலங்கைப் போக்குவரத்துப் பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து இருப்பிட்டிக்கு போக்குவரத்தை மேற்கொண்டுள்ளது. (சி-131)

குருநகர் ஓடக்கரைவீதியில் சம்பவம்:

## பெண்களின் அலறலைக் கேட்டு ஓடிய ஆயுதக் கோஷ்டி

ஆயுதக் கோஷ்டி பெண்களின் அலறலைக் கேட்டு ஓட்டம் பிடித்தது.

இச் சம்பவம் சனியன்று இரவு 10 மணி அளவில் குருநகர் ஓடக்கரை வீதியில் இடம்பெற்றது

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

துப்பாக்கி, கிரனேட், வாள் போன்ற ஆயுதங்களுடன் ஓடக்கரை வீதியில் உள்ள வீடொன்றில் நுழைந்து சிலர் மறைவில பதுங்கி இருக்க, ஒருவர் குறிப்பிட்ட ஓர் அமைப்பின் பெயரை சொல்லி விசாரித்தாராம்.

அவரது விசாரணையில் இருந்து சந்தேகம் கொண்ட வீட்டில் உள்ளவர்கள் கூச்சலிட்டனர். இதனைக் கேட்டு அயலவர்கள் ஓடி வந்தனர் இதனைக் கண்ட மேற்படி ஆயுதக் கோஷ்டி ஓட்டம் பிடித்ததாகக் கூறப்பட்டது

ஆயுதக் குழுவில் ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் இருந்ததாகவும், வாசல் வழியாக நுழையாமல் வீட்டின் பின் பகுதியால் நுழைந்து ஆங்காங்கு பதுங்கி இருந்து கொண்டே காரியத்தில் ஈடுபட்டதாகவும் அறியப்படுகிறது.

(இ-51)

### பருத்தித்துறை டிப்போவுக்கு புதிய பஸ்கள்

பருத்தித்துறை டிப்போவுக்கு மூன்று புதிய பஸ்கள் வந்துசேர்ந்துள்ளன.

பருத்தித்துறை தலைமன்னார் பஸ்சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாவகச்சேரி பஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது (சி 70

### பழைய கட்டட புனரமைப்பு வேலை

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தில் பழைய கட்டடமொன்று புனரமைக்கப்பட்டு வருகிறது

இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது

திருத்த வேலைகளுக்கும் கல்வி அமைச்சு எழுபதினாயிரத்துக்கும் மேற்பட்ட பணத்தை ஒதுக்கியுள்ளது. (சி-131)


## புதிய உயர் கல்லூரி

**B.A. - 1988**

மெய்யியல்-வேல் சிவானந்தன்

20 11-88இல் இருந்து நடைபெறும்
40 மணித்தியால வகுப்புக்கள்.

**G.A.Q. - 90**

புதிய பிரிவு - ஆரம்பம்:
05-10-1988

**G.C.E. A/L 89**

இந்து நாகரிகம்:
அருள்நங்கை
3ஆவது பிரிவு – (சனி, ஞாயிறு)

ஆரம்பம்:
05 - 10 - 88 [பி.ப. 2.00]

விவரங்களுக்கு:
S அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(C 710)


## இரண்டாவது பிறந்தநின வாழ்த்து



## கௌரிநேசன்

விசுவமடுவைச் சேர்ந்த யோகநாதன் லட்சுமி தம்பதிகளின் தவப்புதல்வன் கௌரிநேசன் தனது 2ஆவது பிறந்த தினத்தை இன்று (2 11 88) சிறப்பாகத் தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா அப்பம்மா, தாத்தா, ஆசையப்பா, ஆசையம்மா பெரியப்பா, பெரியம்மா, அத்தைமார், மாமாமார், குட்டி அத்தை, அக்காமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர் கௌரி அம்மன் அருளால் பலகலையும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றார்கள். (C/676)




## வலிகாமம்தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## கேள்வி அறிவித்தல் - 1988

14-09 1988. 30 09-1988 ஆம் திகதிகளில் உதயன் / முரசொலி ஆகிய பத்திரிகைகளிற் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கமைய, கீழ்க்காணும் கட்டடம் / சந்தைக் கடைகளுக்கான கேள்விகள் 25 11-1988 வெள்ளி கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தினால் 21 11-1988 திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் வழங்கப்படும்.

கேள்விகள் யாவும் 25-11-1988 வெள்ளி கிழமை பிற்பகல் 12-30 மணிக்குத் திறக்கப்படும். மேலதிக விபரங்கள் அறிய விரும்பின் வலிகாமம் தெற்கு பிரதேச சபைத்தலைமை அலுவலகத்தில் அல்லது சம்பந்தப்பட்ட உப அலுவலகத்தில் சாதாரண வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

### குத்தகை விபரம்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் உப அலுவலகம்**

| குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வித் தொகையுடன் மேலதிக மாதச் செலுத்த வேண்டிய வாடகை பணம் | வைப்புப் பணம் | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| சுன்னாகம்-யாழ்ப்பாணம் வீதியில் மக்கள் வங்கிக்கு தெற்குப் பக்கமாக அமைந்துள்ள மேல் மாடிக் கட்டடம் | 100/- | 1000/- | 1000/- | 75,000/- |

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, உடுவில் உப அலுவலகம்**


| குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வித் தொகையுடன் மேலதிக மாதச் செலுத்த வேண்டிய வாடகை பணம் | வைப்புப் பணம் | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| இணுவில் சந்தையில் அமைந்துள்ள சந்தைக் கடை இல. 02 | 100/- | 160/- | 1000/- | 50,000/- |

**ஆ. மகாலிங்கம்**
விசேட ஆணையாளர்:
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 31-10-1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நாகமுத்து செல்லையா
(ஸ்தாபகர் தேவி அரிவுத் தொழிற்சாலை)

மலர்வு: 28-2-1909 உதிர்வு: 15-11-1987

திதி: 2-11-1988

தோற்றத்திலுயர்ந்தீர் அப்பு
ஆற்றலினதுவே யன்றோ
போற்றியே தர்மம் தன்னை
ஏற்றங்கள் யாவும் பெற்றீர்
சொற்றிறம்பாமை வாக்கு தேவி
பூசையாக வாழ்ந்தீர்
சற்றலை நற்றவமென
மக்களைப் பேணி நின்றீர்
வெற்புயர் துயரம் காடடைத்
தாசகிய வேளைதன்னில்
காற்றிடைச் சருகு போல
கழலடி சேர்ந்து நின்றீர்
வற்றிய கடலின் மீனாய்
எமதுள்ளம் துடிப்பதல்லால்
சாற்றிட முடியுமாமோ
செல்லையர் நெறிகள் தம்மை?

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

தேவி வாசம்,
சங்கானை.

(7688)

## வேட்டைக்காரரின் சூட்டுக்கு சிறுவன் இலக்கானான்!

மாங்குளம், நவ 2

வேட்டைக்காரர்கள் தீர்த்த துப்பாக்கிச் சூடு சிறுவன் ஒருவனை காயப்படுத்தியது.

இந்தச் சம்பவம் துணுக்காய் பகுதியில் உள்ள கல்விளான் எனும் இடத்தில் இடம் பெற்றது.

காயமடைந்தவர் சிவானந்தன் சுரேஷ் குமார். வயது 6.

சம்பவம் பற்றி காயமடைந்தவரின் தந்தை பொ. சிவானந்தன் தகவல் தருகையில் கூறியதாவது;-

கடந்த 29 ஆம் திகதி பிற்பகல் 4 30 மணி அளவில் எனது மகன் வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தார்.

அவ்வேளை எமது வீட்டுக்குச் சமீபமாகவுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியிலிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் ஒன்று கேட்டது. சத்தத்தை அடுத்து எனது மகன் அழுதபடி நிலத்தில் விழுந்து விட்டார்.

அவரது விலாப்பகுதியில் இருந்து இரத்தம் வந்தது இதனை அடுத்து அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றோம்

துப்பாக்கிச் சூடு அநேமாக வேட்டையாட வந்த சிலர் தீர்த்ததாக இருக்கலாம் என்று தெரிவித்தார். (ஒ-9)

## வர்த்தக ஆசிரியருக்கான சேவைக்காலப் பயிற்சி
### 9 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை

யாழ்ப்பாணம், நவ. 2

வர்த்தக ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

9 ஆம் 10 ஆம் 11 ஆம் ஆண்டு வகுப்புகளில் வர்த்தகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கே இப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது

பருத்தித்துறை, உடுப்பிட்டி வட்டார ஆசிரியர்களுக்கு 9 ஆம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும்-

யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, புங்குடுதீவு பகுதி ஆசிரியர்களுக்கு 10 ஆம் திகதி யாழ் மத்திய கல்லூரியிலும்-

கோப்பாய், சாவகச்சேரி பகுதி ஆசிரியர்களுக்கு 11 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும்-

மானிப்பாய், வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை பகுதி ஆசிரியர்களுக்கு 14 ஆம் திகதி இராமநாதன் கல்லூரியிலும் பயிற்சிவகுப்புக்கள் நடைபெறும்

பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு கடமை லீவு வழங்கப்படும் என்றும் உசாத்துணை நூல்களையும் பயிற்சிக்கு கொண்டு வரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-10)

## விளையாட்டரங்கு

## யாழ். மாவட்டப் பாடசாலை மெய்வல்லுநர் போட்டி
### யாழ். இந்து மைதானத்தில் நாளை

யாழ்ப்பாணம் நவ 2

யாழ் மாவட்ட பாடசாலைகள் மெய்வல்லுனர் போட்டி நாளை 3 ஆம் 4 ஆம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8-30 மணி தொடக்கம் நடைபெறும்.

இறுதி நாள் வைபத்தில் பிரதம விருந்தினராக யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் கலந்து கொள்வார்.

திருமதி தையல்நாயகி சோமசுந்தரம் சான்றிதழ்களை வழங்குவார்.

நிகழ்ச்சிக்கான அறிவுறுத்தல்கள் யாவும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அறிவுறுத்தல் கிடைக்காத பாடசாலைகள் உடனடியாக யாழ் கல்வித் திணைக்கள உடற்கல்விப் பிரிவோடு தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்

போட்டிக்கு யாழ் மாவட்ட உடற் கல்வி ஆசிரியர்கள் யாவரும் உத்தியோகத்தர்களாக கடமையாற்ற வரும்படி அழைக்கப்பட்டுள்ளனர்.

முதலாம் நாள் நிகழ்ச்சிகள்:- 15 வயதின் கீழ் ஆண்:- 200மீ 4 × 100 மீ. 4 × 200 மீ ஓட்டங்கள், உயரம் பாய்தல், குண்டெறிதல், தட்டெறிதல்

17 வயது பிரிவு ஆண்:- 200 மீ 400 மீ 800 மீ. 1500 மீ நீளம் பாய்தல், தடியூன்றிப் பாய்தல், முப்பாய்ச்சல், குண்டெறிதல், ஈட்டி எறிதல் தடதெறிதல் 4 × 200, 4 × 100 அஞ்சல்

19 வயதுப் பிரிவு ஆண்கள்:- 200 மீ 400 மீ. 800 மீ 1500மீ 4×100. 4 × 200 மீ, 110 மீ. தடைதாண்டல் ஓட்டங்களும். உயரம் பாய்தல், தடியூன்றிப் பாய்தல். முப்பாய்ச்சல்,.

15 வயதுப்பிரிவு பெண்கள்:- 200 மீ 4 × 100மீ ஓட்டங்கள், உயரம்பாய்தல், நீளம்பாய்தல், குண்டெறிதல், தட்டெறிதல்.

17 வயதுப் பிரிவுபெண்கள்:- 400மீ 200 மீ 4× 100, 4 × 200 மீ. ஓட்டங்கள், நீளம்பாய்தல். ஈட்டி எறிதல், குண்டெறிதல.

19 வயதுப்பிரிவு பெண்கள்:- 200 மீ 400 மீ. 800 மீ. 100 மீ. தடைதாண்டல், 4 × 100 மீ 4 × 200 மீ, 1500 மீ ஓட்டங்கள், உயரம் பாய்தல். தட்டெறிதல், ஈட்டி எறிதல்.

ஏனைய நிகழ்ச்சிகள் யாவும் மறுநாள் காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும். (இ)

### மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ. 2

கோப்பாயில் இயங்கி வரும் பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவர்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி திரு ந. சனகேஸ்வரன் தலைமையில் இன்று புதன்கிழமை பி ப 1 00 மணியளவில் கோப்பாய் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

மத்தியஸ்தராக திரு. எஸ். அருள்பிரகாசம் கடமையாற்றுவார் (இ)

## ஆண்டு ஒன்று நிறைவுற்ற வேளை

அமரர்

திரு. பொன்னர் பரமானந்தன்
(முன்னைள் பொது முகாமையாளர்.
தெங்கு பனம் பொருள் சங்கம் பண்டத்தரிப்பு)

நிச்சயமற்ற இந்நிலவுலக வாழ்வு.
மரணம் என்னும் பிரிவால் நிச்சயமகின்றது!
கருவுற்றதும் கலலறைக்குமிடையேயான.
கனவுலக வாழ்வு எம் கண்ணீருக்கிடையே
பிரிந்து நிற்கின்றது
நேற்று நீங்கள் சுவைத்த துயில்
நாளை நமக்காகக் காத்திருக்கின்றது
இந்நம்பிக்கையே இன்று நம்மை எல்லாம்
வாழவைக்கின்றது
உடலால் மறைந்து உள்ளத்தால்
நிறைந்து உறையும்
அன்புத் தெய்வத்தின் மலரடியில்
எம் இதய முத்தங்கள் நித்தமும்.

03 - 11 - 88 வியாழக்கிழமை முற்பகல் 10 00 மணியளவில் நடைபெறவுள்ள வீட்டுக்கிரியையிலும் பிற்பகல் 4 00 மணிக்கு நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலில் நிறைவேற்றப்படவுள்ள மோட்ச தீபபூசையிலும் கலந்து அன்னவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்துக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

திருமதி திசைமலர் - பரமானந்தன்

மிதிலை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(7674)

## 45 ஆம் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



P. K. சுந்தரலிங்கம்
(இளைப்பாறிய தபாலதிபரும்
சட்டத்தரணியும் நொத்தாரிசும்)

மலர்வு: 1-1 1929 அழிப்பு: 20-9-1988

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியோருக்கும் பலவழிகளில் உதவி புரிந்தோருக்கும் உற்றார். உறவினர், நண்பர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றிப் பெருக்கைத் தெரிவித்துக்கொள்கிறோம் வியாழக்கிழமை 3- 11- 1988 அன்று இல்லத்தில் நடைபெற இருக்கும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாய் வேண்டுகிறோம்.

'மணி மாளிகை'
உடுப்பிட்டி.

மனைவி,
மக்கள், சகோதரர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. ச. சு. கனகேந்திரம்
அவர்கள்
(உரிமையாளர் ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்
93, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்)

பிறப்பு: 18 - 11 - 1939 இறப்பு: 14 - 11 - 1987

திதி: 2. 11. 1988

அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும் எங்களை வழி நடத்திய எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!

வர்த்தகப் பெருமகனே, சொல்லின் செல்வனே, செயற்கரியன செய்து. திகழ்ந்த செம்மலே! திங்கள் ஈராறு சென்றாலும், உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் அகல் விளக்காய் அணையாத தீபமாய் என்றும் ஒளிர்கின்றது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, மக்கள், தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள், மாமனார், மைத்துனர்கள், மைத்துனிகள். மருமக்கள் உறவினர், நண்பர்கள்,

பிள்ளையார் கோயிலடி,
களபூமி, காரைநகர்.

(7565)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1988-11-30ஆம் தேதி வரையில் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தகமும் முகாமைப்படிப்புகளிலும் சிரேஷ்ட விரிவுரையாளர் / விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர்.
2. தமிழில் உதவி விரிவுரையாளர்.

இவ்வலுவலகத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பம் செய்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் ஏனைய விபரங்களையும் பெற விரும்புவோர் சுய முகவரியிட்டு ஒட்டப்பெற்ற 23x10 ச மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்,

அரசாங்கத் திணைக்களங்கள். அரச கூட்டுத்தாபனங்கள். நியதிச் சட்ட சபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அத்தகைய நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட பதவிக்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் எடுத்து சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

**பதில் பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
28-10-1988

(C/698)

## கடும் பாதிப்புற்றோர்களுக்கான நிவாரணம்

1983 - 07 - 24 தொடக்கம் 1987 - 12 - 31 வரையிலான காலப்பகுதியில் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஊனமுற்றவர்களுக்கும், குடும்ப அங்கத்தவரை இழந்த குடும்பங்களுக்கும் நிவாரணம் யாழ். செயலகத்தினால் வழங்கப்படவுள்ளது இதுவரை காலமும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வந்த இந்நிவாரணப் பணி 88 – 08 – 31 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்துக் கிணங்க 88 - 10 – 15 ஆம் திகதி தொடக்கம் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் மாவட்ட அரச அதிபர்களுக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. இந் நிவாரணத்துக்கான விண்ணப்பப்படிவங்கள் 88 - 11 – 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் சரவெட்டி, பருத்தித்துறை உதவி அரசாங்க பிரிவுடன் யாழ். செயலகத்தில் விநியோகிக்கப்படும்.

| தினங்கள் | | உ. அ. அ. பிரிவு |
| --- | --- | --- |
| திங்கள் | — | யாழ்ப்பாணம். நல்லூர். |
| செவ்வாய் | — | கோப்பாய். உடுவில், சாவகச்சேரி. |
| புதன் | — | சங்கானை, சண்டிலிப்பாய். தெல்லிப்பழை. |
| வியாழன் | — | வேலணை ஊர்காவற்றுறை, நெடுந்தீவு. |
| வெள்ளி | — | பருத்தித்துறை, கரவெட்டி. |

விண்ணப்பப்படிவங்களைப் பெறத் தகுதியுடையோர் பின்வரும் ஆவணங்களுடன் நேரில் வந்து படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

1. படிவம் பெற வருபவர் தம்மை அறிமுகப்படுத்தும் ஆவணங்கள
   - (i) தேசிய அடையாள அட்டை
   - (ii) கிராம சேவை அலுவலரால் சமீபத்தில் வழங்கப்பட்ட அறிமுக அட்டை
   - (iii) பின் உரித்தாளர்/பாதுகாவலன் என உரிமை கோரும் பட்சத்தில் கி. சே அ / உ. அ. அ. ஆகியோரினால் வழங்கப்பட்ட சிபார்சுக் கடிதம்.
2. உயிரிழப்புக்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
   - (i) மரணச் சான்றிதழ்
   - (ii) திருமண அத்தாட்சிப்பத்திரம்
   - (iii) பொலீஸ் அறிக்கை
3. ஊனமுற்றோர் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
   - (i) அரசாங்க வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்ட வைத்திய அத்தாட்சிப் பத்திரம்
   - (ii) பொலீஸ் அறிக்கை

● மேற் கூறிய ஆவணங்கள் கொண்டு வராவிடில் விண்ணப்பப்படிவம் வழங்கப்படமாட்டாது.

● முக்கிய கவனிப்பு:-

(i) அரச, அரச கூட்டுத்தாபன உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசசார்புள்ள நிறுவன ஊழியர்களுக்கு இத்திட்டம் ஏற்புடையதாகாது. ஆனால் ஓய்வூதியம் பெறுநர்களுக்கு இது ஏற்புடையது.

(ii) பாதுகாவலரோ அல்லது பெற்றோரோ ஊனமுற்ற பராயமடையாத பிள்ளைக்காக விண்ணப்பிக்கலாம்

(iii) ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு புனரமைச்சின் கீழ் நிவாரணம் பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதற்கு அருகதையற்றவர்கள் இந்நிவாரணத்தை ஏற்கனவே பெற்றவர்களின் விபரம் அமைச்சிலிருந்து பெறப்பட்டுள்ளது.

வை. மு. பஞ்சலிங்கம்
யாழ். மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
31-10 88.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

**பொருள்:**
ஒருவனுக்கு ஊதியம் என்று சொல்லப்படுவது அறிவில்லாதவருடன் செய்துகொண்ட நட்பில் இருந்து நீங்கி அவரைக் கைவிடுதலாகும்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 292/2 நாவலர் வீதி. தொலைபேசி: 24805, 22073
யாழ்ப்பாணம்.
02 11 1988 த. பெ இல 23


## சமயோசிதம் தேவை

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. மாணவர்கள் தமக்கு முக்கியமென்பட்ட நான்கு கோரிக்கைகளை முன்வைத்தே உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

எமது பிரச்சினைகள் பலவற்றை நிர்வாகத்தினருக்கு உரிய முறையில் எடுத்துச் சொன்னோம். அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிடில் எமக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை விளக்கிக் கூறினோம். பல தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடத்தினோம். நிர்வாகத்தினர் எமது நிலையைப் புரிந்து கொண்டதாக இல்லை. தமது நிலைப்பாட்டில் இருந்து விட்டுக்கொடுப்பதாகவும் இல்லை. அதனால் வேறு வழி இன்றி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தோம்.

இவ்வாறு மாணவர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. எம்மைப் பொறுத்தவரையில் நிர்வாகத்தின் நிலைப்பாடு என்ன, மாணவர்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் முழுக்க முழுக்கச் சரியானவை தானா என்பவை குறித்துப் போதிய தகவல்கள் இல்லை.

பல்கலைக்கழகத்துக்கு — வகுப்புகளுக்கு — சமுகம் கொடுக்கும் விடயத்தில் நிர்வாகம் விட்டுக் கொடுப்பது சிறிது கஷ்டமாக இருக்கலாம். எனினும் வடக்கு. கிழக்கில் இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் மாணவர்களுக்கு மேலும் சிறிதளவு சலுகை வழங்கினால் பாதகமிருக்காது.

ஏனைய கோரிக்கைகள் சம்பந்தமாகவும் இரு சாராரும் கொண்டு கொடுத்து ஒரு சமரசத்துக்கு வருவதே நல்லது; வரவேற்கத்தக்கது.

தென்னிலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் யாவும் மூடப்பட்டுவிட்டன. பாடசாலைகளும் மூடப்பட்டுவிட்டன. மாணவர் போராட்டங்களும் அவற்றை அடக்குவதாகக் கூறி அரசபடைகள் நடத்தும் அநியாயங்களும் நாளுக்குநாள் உச்சக்கட்டத்தை அடைந்து வருகின்றன.

மாணவர்களைக் கண்டபடி கைதுசெய்தல் கடத்துதல்: அவ்வாறு கடத்துவோரின் உயிர் போக்கி அவர்களை எரித்தல் ஆகிய கொடுமைகள் தெற்கில் சாதாரண சம்பவங்களாக நடந்துவருகின்றன.

வடக்கு, கிழக்கில் மட்டும்தான் பல்கலைக்கழகங்களும் பாடசாலைகளும் (சிறு, சில தயக்கங்கள், தடங்கல்களின் பின்னர்) இயங்கி வருகின்றன. தெற்கில் மாணவர் கல்வி குழம்பினால் — பாடசாலைகள் மூடப்பட்டால் — தமிழ்ப் பகுதிகளிலும் அப்படியே ஆகவேண்டும் என்றுகூட அரசு நினைத்தது. பல எதிர்ப்பு, ஆட்சேபத்தின் பின்னர் அந்த நிலை நீக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால், தமிழ்ப் பகுதி மாணவர்களின் கல்வியைக் குழப்புவதற்கு அரசு தருணம் பார்த்திருந்தாலும்கூட, ஆச்சரியப்படுவதற்கில்லை...!

இத்தகைய சூழ்நிலையில் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதப் போராட்டம் நீடிக்க இடம்கொடுக்கலாகாது. நிர்வாகத்தினரும் மாணவரும் இயன்றவரை இரண்டு தரப்பிலும் சமரசத்தை இலக்காகக் கொண்டு புரிந்துணர்வுடன் செயலாற்ற வேண்டும். அது தவறினால் எறும்பு எடுத்த புற்றுக்குள், அரச நாசகாரப் பாம்பு வந்து புகுந்து, தமிழ்ப் பகுதிகள் முழுவதினதும் மாணவர் கல்வியைக் கொத்தி விஷம் பாய்ச்சிவிடும்.

இவ்விடயத்தில் தமிழ்ப் பகுதிகளின் கல்வித்துறை நிர்வாகிகளும், மாணவர்களும் விழிப்புடனும், சமயோசிதத்துடனும் செயற்படுவது மிக மிக அவசியம்.

## ஸாம்பியாவின் ஜனாதிபதியாக கவுண்டா 2ஆவது முறையாக மீண்டும் பதவி ஏற்கிறார்

ஸாம்பியாவின் புதிய ஜனாதிபதியாக திரு. கென்னத் கவுண்டா பதவி ஏற்கின்றார்.

64 வயதான திரு. கவுண்டா ஜனாதிபதியாக மீண்டும் ஓர் ஐந்து ஆண்டு காலம் பணியாற்றுவார்.

1964 ஆம் ஆண்டு ஸாம்பியா சுதந்திரமடைந்தது.

அன்று தொடக்கம் நாட்டின் ஜனாதிபதியாக திரு. கவுண்டாவே பணி புரிந்து வருகிறார்.

ஸாம்பியா ஒரு கட்சி ஆட்சி முறையைக் கொண்டது.

கடந்த வாரம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் திரு. கவுண்டா மட்டுமே போட்டியிட்டார். அப்போது அவர் 95 சதவீதமான வாக்குகளைப் பெற்றார். (எ)

## உலகின் மிகப் பெரிய ஆமை

லண்டன் நவ 1

உலகின் மிகப் பெரிய ஆமை ஒன்று வேல்ஸ் கடற்கரையில் இறந்து கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாக பி.பி.சி. வானொலி அறிவித்தது.

இதன் எடை 2 ஆயிரம் இறாத்தல் என்று தெரிவிக்கப்பட்டது.

மெக்ஸிக்கோ கடலில் இருந்து உணவு தேடி வந்தபோது இது இறந்தது என்று கூறப்பட்டது. (எ)

# பலஸ்தீனியர் வீடுகள் குண்டு வைத்துத் தகர்ப்பு;

# இஸ்ரவேலிய இராணுவத்தின் அடக்கு முறை!

ஜெருசலம், நவ. 1

ஜோர்தானின் மேற்குக் கரையோரப் பிரதேசத்தில் இஸ்ரவேல் இராணுவத்தின் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

இஸ்ரவேல் பயணிகள் பஸ் மீது பெட்ரோல் குண்டு வீச்சு நடத்தப்பட்டதில் 26 வயது தாயும் அவரின் மூன்று வயது, இரண்டு வயது, 10மாதமே நிரம்பிய மூன்று குழந்தைகளும் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே.

### இஸ்ரவேலிய பயணிகள் கொல்லப்பட்டதன் எதிரொலி

இறந்தவர்களின் சடலங்கள் ஜெருசலத்தில் அடக்கம் செய்யப்பட்டன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான பலஸ்தீனியரை இஸ்ரவேல் இராணுவம் கைது செய்தது.

குண்டுத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படும் ஏழு பலஸ்தீனியர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் மூவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டதாகக் கூறிய இஸ்ரவேல் படையினர் அந்த பலஸ்தீனியர்களின் வீடுகளைக் குண்டு வைத்துத் தகர்த்தனர். (எ)

உழல் வழக்கு:

# இமெல்டா மார்கோஸ் 50 லட்சம் டொலர் பிணையில் விடுதலை

## விசாரணை ஒத்திவைப்பு

நியூயார்க், நவ 1

பிலிப்பீனின் முன்னாள் ஜனாதிபதி பேர்டினண்ட் மார்கோஸின் மனைவி இமெல்டா மார்கோஸை நியூயார்க் நீதிமன்றம் ஒரு ஐம்பது லட்சம் டாலர் பிணையில் விடுவித்தது.

பிலிப்பீன்ஸ் அரசுக்குச் சொந்தமான 10 கோடி டொலர் பணத்தைச் சூறையாடியது, அப்பணத்தைக் கொண்டு அமெரிக்காவில் சொத்துக்களை வாங்கியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் பற்றிய குற்றப்பத்திரிகை திருமதி இமெல்டா மார்கோஸிடம் கையளிக்கப்பட்டது.

திருமதி இமெல்டா தான் சுற்றவாளி என்று கூறினார்.

நீதிமன்றம் அவரை 50 லட்சம் டொலர் பிணையில் செல்லும்படி உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தது.

அமெரிக்காவில் தான் வைத்துள்ள சொத்துக்கள், நகைகளைப் பிணையாக வைக்க அனுமதி தருமாறு திருமதி இமெல்டா விண்ணப்பித்தார்.

நீதிமன்றம் அதனை நிராகரித்து அமெரிக்காவில் உள்ள மார்கோஸின் உடைமைகள், சொத்துக்கள் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டியவை எனவும் ஆகவே பணமாகவே பிணை செலுத்தப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்றத்துக்கு திருமதி இமெல்டா வந்தபோது, அவருக்கெதிரான கோஷங்களை எழுப்பியபடி நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மெய்காவலர்கள் அவரைச் சூழ்ந்தனர்.

விசாரணைக்குச் சமுகமளிப்பதற்காக திருமதி இமெல்டா தனி ஜெட் விமானம் ஒன்றில் ஹவாயிலிருந்து 6 ஆயிரம் மைல்களைக் கடந்து நியூயார்க்கிற்கு வார இறுதியில் வந்து சேர்ந்தார். (எ)

## சிறப்புப் படை

புதுடில்லி நவ 1

பஞ்சாப் மாநிலத்தில் தீவிரவாதத்தை ஒடுக்க சிறப்புப் பயிற்சி பெற்ற ஆயிரம்பேர் ஈடுபடுத்தப்படுவர் என்று அறிவிக்கப்படுகிறது.

தீவிரவாதச் செயல்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட அமிர்தஸரஸ் மாவட்டத்தில் இரவு பகல் ரோந்தில் புதுக்காப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர் என்று அறியவருகிறது. (எ)

# ஆப்கனுக்கு மீண்டும் சோவியத் ஆயுதம்

## அரசுப் பேச்சாளர் தகவல்

மாஸ்கோ நவ 1

ஆப்கன் அரசுக்கு நவீன ஆயுதங்களை சோவியத் அரசு வழங்க ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மாஸ்கோவில் பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

கெரில்லாக்களின் தாக்குதலுக்குப் பதில் நடவடிக்கை எடுக்கவே இவ்வாயுதங்கள் வழங்கப்படுகின்றன என்றும் அந்தப் பேச்சாளர் சொன்னார்.

இதனிடையில் சோவியத் யுத்தப்போர் விமானங்கள் ஆப்கனிஸ்தானில் கெரில்லா முகாம்கள் மீது தொடுத்த தாக்குதலை நடத்தி வருவதாக அமெரிக்க அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

அதேவேளை ஜெனிவா உடன்பாட்டை அமுல் நடத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைக் களைவது குறித்து ஆராய சர்வதேச மாநாடு ஒன்றைக் கூட்டும்படி ஐ.நா பொதுச் செயலாளரை ஆப்கன் அதிபர் நஜிபுல்லா கேட்டுள்ளார். (எ)

மாகாண சபைத் தேர்தல்:

# கிழக்கில் வாக்களிப்பதற்கு 6,35,516 பேர்கள் தகுதி

## மொத்தம் 576 வாக்களிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம், நவ. 2

எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு கிழக்கு மாகாணத்திலிருந்து மொத்தம் ஆறு லட்சத்து முப்பத்தையாயிரத்து ஐந்நூற்றுப் பதினாறு (6 35 516) பேர் தகுதி பெற்றிருக்கின்றனர்.

பிரஸ்தாப தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தம் 169 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

மட்டக்களப்பில் 68, பட்டிருப்பில் 49, கல்குடாவில் 52 என்ற அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த 169 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படும்.

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தம் 164 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

சேருவிலவில் 62, திருகோணமலையில் 49, மூதூரில் 53 என்ற அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் இந்த 164 வாக்களிப்பு நிலையங்களும் நிறுவப்படும்.

அம்பாறை மாவட்டத்தில் மொத்தம் 243 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

திகாமடுல்ல, அம்பாறை ஆகிய இடங்களில் 90, சம்மாந்துறையில் 39 கல்முனையில் 35, பொத்துவிலில் 79 என்ற அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் இந்த 243 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படும்.

இதன் பிரகாரம் இந்த மூன்று மாவட்டங்களிலும் மொத்தம் 576 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

சம்பந்தப்பட்ட மூன்று மாவட்டங்களிலும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்காக சுமார் ஐயாயிரம் அதிகாரிகள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. (ஓ ஐ)

# 83 ஜூலை முதல் 87 டிச. வரை பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் கிடைக்கும்

## குறிப்பிடத்தக்க குழுப்புகளுக்கு மட்டும்

யாழ்ப்பாணம், நவ 2

1983 ஜூலை தொடக்கம் 1987 டிசம்பர் வரை இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஊனமுற்றவர்களுக்கும் குடும்ப அங்கத்தவரை இழந்த குடும்பங்களுக்கும் யாழ் செயலகத்தினால் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இந்த நிவாரணத்துக்கான விண்ணப்பப் படிவங்கள் நவம்பர் மாதம் 4ஆம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. வை. முருகலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு 7ஆம் திகதி திங்கட்கிழமையும் —

கோப்பாய் உடுவில், சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் —

சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு 9ஆம் திகதி புதன்கிழமையும் —

வேலணை ஊர்காவற்றுறை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு 10ஆம் திகதி வியாழக்கிழமையும் — பருத்தித்துறை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு 11ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

படிவம் பெற விரும்புபவர்கள் உரிய ஆவணங்களுடன் மேற்குறிப்பிட்ட திகதிகளில் சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

ஏற்கெனவே இந்தத் திட்டத்தின்கீழ் நிவாரணம் பெற்றவர்களும், அரச, அரச கூட்டுத்தாபன, உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களும் இத்திட்டத்தின்கீழ் நிவாரணம் பெறத் தகுதியற்றவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ ஐ)

# யாழ் நகரில் சிறப்பாக நடைபெற்ற மீலாத் விழா

யாழ்ப்பாணம் நவ 2

நபி நாயகம் ஸல் அவர்களின் பிறந்ததின விழா யாழ்ப்பாணம் வீதியில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ் விழா மன்பஉல் உலூம் பாடசாலை அதிபர் ஜனாப் என். எம். ஷாபி தலைமையில் அல்ஹாபிஸ் எம் முஹம்மட்டின் கிறாஅத்துடன் ஆரம்பமானது.

பிரதம அதிதிகளாக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் மௌலவி எம் ஐ அப்துர் ரஸ்ஸாக், யாழ். முஸ்லிம் விவாகப் பதிவாளரான ஜனாப் பஸ்ஜித் ஐதுருஸ் அலி, மௌலவி பி கே மகம்மது மீரான், புஹியித்தீன் அலிம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மௌலவி எம் சதகதுள்ளா, மௌலவி எஸ் எம். பௌசுல், மௌலவி எஸ் எச் சலீலுர் ஹ்மான் மௌலவி எம் எஸ் செய்யித் முஹம்மட் மௌலவி கே. பி. ஸதீன மௌலவி அல்ஹாஜ் எம். எம். நகீ ஆகியோர் உரையாற்றினர்.

ஜனாப் எம் ஐ என். நிஸாஸ் நன்றியுரை வழங்கினார். (ஓ-ச)

## அனுதாபம்

தமிழகத்தின் விடிவுக்காகத் தமிழ் மக்களின் அபிலாசைகளை இந்தியாவுக்கும் உலக நாடுகளுக்கும் எடுத்துக் கூறிய அமரர் கசிவனந்தசுந்தரம் அவர்களின் திடீர் மறைவு தமிழ்பேசும் மக்கள் அல்லலுறும் இந்த இக்கட்டான சூழ்நிலையில் பேரிழப்பாகும்.

இவ்வாறு காரைநகர் பிரஜைகள் குழுவினர் தாது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளனர். (ச-73)

## மின் இணைப்பு வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம் நவ 2

வலிகாமம் வடக்குப் பிரதேசசபை விசேஷ ஆணையாளர் மின் அத்தியட்சகர் ஆகியோரின் முயற்சியினால் இதுவரை வடங்களுக்கு மேலாக இழுபட்டு நிலையில் இருந்த கையிட்டி கிழக்கு காங்கேசன்துறை மூத்தி வீதிக்கு உரிய மின் இணைப்பு வேலையும், விக்னேஸ்வரா வீதியின் மின் திருத்த வேலையும் ஆரம்பமாகியுள்ளன. (ச)

# யாழ். குடாநாட்டில் விசர் நாய் நோய் அதிகரிப்பு

மானிப்பாய், நவ 2

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விசர்நாய் நோய் அதிகரித்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளதால் வீட்டில் நாய் வளர்ப்பவர் அவதானமாக இருந்து தம் நாய்களுக்கு விசர்நாய் நோய் தடுப்பூசி போட்டுக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி சுமணதேவி தனபாலசிங்கம் எச்சரித்துள்ளார்.

விசர் நோயானது நாய்களில் ஏற்பட்டு அதனால் மனிதருக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்த வல்லது.

இது ஒரு வைரஸ் நோய்.

நாய்களுக்கு இந் நோய் ஏற்பட்டால் இரண்டு வழியில் நோயை வெளி காட்டும்.

ஒன்று பேராமானது மனிதரை அல்லது நாயை கடித்தால் அந் நாயின் கிருமி உடலில் பரவி கடிபட்டவருக்கு விசரை ஏற்படுத்தும்.

இரண்டாவது அமைதியான வெளிகாட்டல்.

நாய் சாப்பிடாது நோய் வந்த 10 நாட்களுக்குள் நாய் இறந்து விடும்.

எனவே உங்கள் நாய்களுக்கு 2 ஆண்டுக்கு ஒரு முறை தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுங்கள்.

இப்படி அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச-90)

# சுவாமி விவேகானந்தா நினைவு பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம் விவேகானந்த சபையினரின் ஆதரவில் யாழ்ப்பாண நகர பாடசாலைகளில் அண்மையில் நடத்தப்பட்ட சுவாமி விவேகானந்தர் நினைவு பேச்சுப் போட்டியில் பின்வருவோர் பரிசில்களைப் பெற்றுள்ளனர்

கீழ்ப்பிரிவு முதலாம் இடம் செல்வி முகுஞ்சனி (யாழ் வேம்படி மகளிர் கல்லூரி) தங்கப்பதக்கம்

2 ஆம் இடம் செல்வி. இ. சுகந்தினி யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயம்.

3ஆம் இடம்: செல்வி லோ கோலா ஆனைப்பந்தி மெதடிஸ்தமிஷன் பாடசாலை

4 ஆம் இடம்: செல்வி பு விஜேனிதினி யாழ் சன்மார்க்க வித்தியாலயம்

மேற்பிரிவு முதலாம் இடம்; செல்வன் பி நந்தகுமார் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) தங்கப்பதக்கம்

2 ஆம் இடம் பா தீஸ்வரூபன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

3 ஆம் இடம் செல்வி ப பாலகி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

# முல்லைத்தீவு மாவட்ட வீடமைப்புக்கு ரூ. 42,23,000

மாங்குளம் நவ 2

முல்லைத்தீவு மாவட்ட வீடமைப்புக்கு 42 இலட்சத்து 23 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் பிரேமதாசவின் செவண வீடமைப்புத் திட்டத்தின்கீழ் இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை மாங்குளம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் திரு கே ரி எம் விஜயகுமார் உதயனுக்குத் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு 14 06 000 ரூபாவும், துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு 4,04 000 ரூபாவும். பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு 4 04,000 ரூபாவும், முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு 20 08 00 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான விபரங்களை, தற்போது முல்லைத்தீவு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை காரியாலய அதிகாரிகளும் அப்பகுதிகளின் உதவி அரசாங்க அதிபர்களும், கிராம சேவையாளர்களும் சேகரித்து வருகிறார்கள்.

இந்த வீடுகள் அனைத்தும் தேவையுடையோருக்குப் பொருத்தமான பகுதிகளில் அளிக்கப்படும். (ச-94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச் சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

02 - 11 - 1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதி
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**வல்வை.....**

றன.

பேச்சுவார்த்தைகளின் போது பிரதமர் ராஜீவ் காந்திக்கு முகவரியிடப்பட்டு வல்வையைச் சேர்ந்த சுமார் 225 பேரினால் கையொப்பமிடப்பட்ட மகஜர் ஒன்றும் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பேரணியில் சென்றோர் கலைந்து சென்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதனிடையில் பேரணியின் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்துகளும் தடைப்பட்டன. (உ-160)

## விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

பிரிவு:

**89 துரித மீட்டல்**
(Evening Classes)
பழைய பாடத்திட்டம்

**O/L ஆரம்பம்: 4- 11- 88**
மாலை 2. 45 - 4. 45

மு. குறிப்பு:
கடமை, சட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்

O/L மாணவர்களின் நன்மை கருதி புதிய, பழைய பாடத் திட்டத்துக்கான பரீட்சை சென்ற வருடம் போல் இலவசமாக நடத்தப்பட உள்ளது.

பெயர்களைப் பதிவு செய்து அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

**விக்னு டியூசன் சென்ரர்**
(C/722)

3 ஆவதும் கடைசி வாரமும்!

**ஹரன்** யாழ்நகர் வெண்திரையில்
✶ தினசரி 10-30,—2-30 ✶
✶ கமலஹாசன் (இருவேடங்களில்)
✶ சத்யராஜ், ✶ சுஜாதா
✶ மாதவி, ✶ மனோரமா
நடித்த

- மங்கம்மா பரம்பரையில் ஓர் 'நவீன' மங்கம்மா
- கணவனுக்கிளைத்த இன்னல்களை தனயன் மூலம் பழிவாங்க ஓர் சபதம்
- அன்னை இட்ட கட்டளையை நிறைவேற்றும் தனயன்



✶ ஓர் குடும்பச்சித்திரம் ✶

**மங்கம்மா சபதம்**
(கலர்) (7860)

**A/L 89 விஞ்ஞான மாணவர்கட்கு!**

வேப்பவியல் ஆரம்பம்: 02-11-1988
(DAY CLASS) Wed. 7.30 a.m.
ஆசிரியர்: Mr. மணியம் B.Sc. (Hons)
3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (C 434)

## நீர்வேலியில் சூடு! குடிசை கொளுத்தப்பட்டது

கோப்பாய், நவ 2

நீர்வேலி முருகமூர்த்தி கோவிலுக்கு அண்மையில் குடிசைஒன்று கடந்த திங்கள் இரவு தீ மூட்டிக் கொளுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து சுமார் அரை மணித்தியாலம் வரை இடைஇடையே துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து நீர்வேலியை அண்டிய கிராமப் பகுதிகளில் பதற்றம் நிலவியது.

விசாரணைக்கென அமைதிப்படையினர் கனகலிங்கம், சின்னட்டியன் உட்பட மூவரை அழைத்துச் சென்றனர்.

இச்செய்தி எழுதும் வரை அவர்கள் விடுவிக்கப்படவில்லை. (ஒ-72)

## ஆசிரியர் பட்டியல் இன்று வரலாம்

யாழ்ப்பாணம், நவ. 2

ஆரம்பக் கல்வி ஆசிரியராகத் தெரிவாகவிருக்கும் சுமார் 10 பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்று இன்று அல்லது நாளை யாழ். கல்வித் திணைக்களத்தை வந்து சேர உள்ளதாக அறியவருகிறது.

இதேவேளை மேலும் ஒரு பெயர்ப்பட்டியல் இவ்வாரத்தில் அனுப்பி வைக்கப்பட உள்ளது எனவும் அறியவருகிறது. (ஒ-9)

## மூவர் மரணம்

யாழ்ப்பாணம் நவ 2

கடந்த சனிக்கிழமை ஆனையிறவு உமையாள்புரம் பகுதியில் ஏற்பட்ட மோதல் ஒன்றில் போராளிகள் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. (ஒ-9)

## சங்கம் கலைப்பு

சங்கானை வர்த்தகர் சங்கம் கடந்த மாதம் 27 ஆம் திகதியுடன் கலைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பானதகவலை சங்கானை வர்த்தகர் சங்கத்தலைவராகவிருந்த திரு. சு. கோவிந்தசாமி அறிவித்துள்ளார்.

உ

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



திரு. மாணிக்கம் சிவானந்தராசா அவர்கள்
தோற்றம். 19-04-1956
மறைவு: 02-11-1987

இதயத்தின் கனவுகளைக்
கானலாக்கி
இகவாழ்வின் ஒளிதன்னை
இருளுமாக்கி
மலர் போலுன் மழலை
தனை மறைவுமாக்கி
மனையாளின்
மனத் திரையில்
நிழலுமானாய்
பாசத்தில் உனக்கு நிகர்
நீயேயானாய்
பண்புதனில்
உறைவிடமாய்
உயர்ந்தே நின்றாய்
அன்பினுக்கே
அடைக்கலமாய்
வாழ்ந்து நின்றாய்
அழிப்பிற்கு
ஆளானாயே!
பொய்யான
உலகமிதைப் புரிந்து
கொண்டே
மெய்யான தத்துவங்கள்
பேசி நின்றாய்
ஐயா உன் கற்பனைகள்
கணப்பொழுதில்
பொல்லாத யமன்
கொடுமையாச்சே!
தங்களின் பிரிவால்
துயருறும்:
அன்பு மனைவி, மகன்,
உற்றார் உறவினர்.
சிலம்புப்புளியடி,
சங்கானை.
(7857)

## வங்கிகள் மூலம்....:

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று நாட்களே இயங்கி வருகின்றன. எனவே இந்த நாட்களில் சம்பந்தப்பட்ட நிவாரணப் பணத்தை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் வங்கியின் வழமையான வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

அத்துடன் வங்கி ஊழியர்களாலும் அத்தகைய நாட்களில் இந்த மேலதிக வேலையைச் செய்வதற்கான சந்தர்ப்பமும் கிடைக்காமல் போய் விடும்.

எனவேதான் சனிக்கிழமைகளில் இதற்கென விசேஷமாக வங்கிகளைத் திறந்து இந்த நிவாரணப் பணத்தை வழங்குவதற்கு இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் தற்போது ஆலோசித்து வருகின்றன.

எதிர்வரும் சனிக்கிழமை யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கைவங்கிக் கிளை ஊடாக மொத்தம் 685 குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் நிவாரணப் பணம் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. (உ-ஒ ஐ)

## உலக....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வி வியூகே ஆகிய இருவரும் நேற்று காலையில் கொழும்பிலிருந்து விமானமூலம் பலாலி ஊடாக யாழ் நகர் வந்தனர்.

இவர்கள் யாழ் போதனா வைத்தியசாலை இரத்தவங்கி, மேகநோய் சிகிச்சை நிலையம் என்பவற்றை பார்வையிட்டதுடன் வைத்தியசாலை அதிகாரிகளுடனும்பேச்சு நடத்தினர்.

யாழ் போதனா வைத்தியசாலைக்கு எயிட்ஸ் பரிசோதனை கருவி ஒன்றையும், மேக நோய் சிகிச்சை உபகரணங்களையும் வழங்குவது தொடர்பான ஆய்வுகள் சிலவற்றை மேற்கொள்வதற்காகவே இவர்கள் இங்கு விஜயம் செய்துள்ளதாக சுகாதார திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-9)

## அவசர அழைப்பு

கொழும்பு, நவ 2

மின்னேரியா இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய்களை உடனே கடமைக்குத் திரும்பும்படி அரசு பணித்துள்ளது.

## பன்னலை----

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

ஏற்றிக் கொண்டு புறப்பட்ட சமயம் அவர்களை நோக்கி இரண்டு பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும். அதில் இரு தீவிரவாதிகள் உயிரிழந்ததாகவும், தெரியவருகிறது. இந்த இருவரும் உயிரிழந்ததையடுத்து இரு வாகனங்களில் ஏற்றப்பட்ட 131 தானியங்கத் துப்பாக்கிகள் வாகனங்களுடன் அந்த இடத்திலேயே பின்னர் மீட்கப்பட்டன.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மொத்தம் 9 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் நால்வர் தீவிரவாதிகள்.

நான்கு படையினரும் இத்தாக்குதல் சம்பவத்தில் பலியாகினர். அவர்களில் இருவர் இராணுவத் துணைப்படைச் சிப்பாய்கள், மற்றொருவர் இராணுவ லெப்டினன்ட் நான்காமவர் சாதாரண சிப்பாய். காரச்சாரதியான சிவிலியன் ஒருவரும் உயிரிழந்தார்.

பன்னலை இராணுவ முகாம் கொழும்புக்கு வடக்கே 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

**முதலாண்டு நினைவஞ்சலி**



**வைத்திலிங்கம் அரியநாயகம்**

மலர்வு: 13 - 05 - 1932 உதிர்வு: 15 - 11 - 1987

நவமி திதி

மாற்றான் உருவில் வந்த கூற்றுவனே எங்கள் அன்புத்தெய்வத்தின் உயிரைப்பறித்தாயோ? ஆண்டவனே மரணத்தை நினைக்கும் முன்னே ஒரு நொடியில் மாய்த்து விட்டாயோ? எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர் மலர்களை அர்ப்பணிக்கின்றோம்.

-பிள்ளைகள்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய். (7697)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



செல்வி சசிகலா தேவராசா
மலர்வு: 15- 8- 1980
உதிர்வு 2- 11- 198?

அன்பு மலரே
எங்கள் ஆசைக்
கனியமுதே
பிஞ்சுமுகம்
காட்டிப்பேசும்
பொற்சித்திரமே
அஞ்சுவயதும்
முடிந்து ஆடி
வரும் கோலமதில்
கூற்றவனின்
கொடுமைக்கே
ஆழாகிப்
போயினையோ.

முல்லைச் சிரிப்பழகே
முழுநிலவின்
குளிரொளியே
செல்ல மொழிபேசி
எங்கள் சிந்தை
மகிழவைத்தாய்
சொல்ல முடியாத
வேதனையைத்
தந்துவிட்டு
செல்லக்கிளியே
நீ சென்ற இடம்
சொல்லாயோ
மின்னல் போல
குவிந்த வாழ்
விலுன்னைப்
பறிகொடுத்து
கண்கள் குளமாகக்
காலமதைக்
கழிக்கின்றோம்
கண்ணே உனை
யெண்ணி யெண்ணி
ஏங்கித் தவிக்
கின்றோம்
மண்ணிலெம் மடி
மீது மீண்டொருக்
கால் வாராயோ!
உன் பிரிவால்
துயருறும் அன்பு
அப்பா, அம்மா,
தம்பி, தங்கை,
உற்றார், உறவினர்
ஆஸ்பத்திரி வீதி
சங்கானை
(7856)

## நாவற்குழியில் பஸ் விபத்து

யாழ்ப்பாணம் நவ 2

நாவற்குழிச் சந்திக்குச் சமீபமாக கிளிநொச்சி சாலைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்று நண்பகல் விபத்துக்கு உள்ளாகியது.

இதில் பயணம்செய்த சிலர் சாயமுற்ற நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

அவர்கள் விவரம் வருமாறு:—

வீரகத்தி குணரத்தினம் (வயது 46) (பஸ் சாரதி), சின்னத்தம்பி நமசிவாயம் (வயது 60) பண்டத்தரிப்பு சதிரேசு சண்முகநாதன் (வயது 40) உருத்திரபுரம். திருமதி சாரதாம்பாள் பத்மநாதன் (வயது 43) வட்டக்கச்சி, பொன்னையா சரஸ்வதி (வயது 58) பொன்னையா யோகம்பிகை (வயது 36) (ஒ-9)

## கல்வியங்காட்டில்

கல்வியங்காட்டில் நேற்று மாலை ஒருவர் கொலைசெய்யப்பட்டதாக அறியவந்துள்ளது.

ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த சந்தையா செல்லத்துரை (வயது 30) என்பவரே கொலையுண்டவராவர்.

இவரது சடலம் மரண விசாரணைக்காக யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா நாகேஸ்வரி

இல. 12, சிவன்பண்ணை வீதி, கொட்டடியைச் சேர்ந்த திருமதி கந்தையா நாகேஸ்வரி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வி. கந்தையாவின் அன்பு மனைவியும், நித்தியராஜா, திருமதி நித்தியசெல்வி, காலஞ்சென்ற நித்தியயோகன், நித்தியானந்தன் (France), மருதரட்ணம் (France), செல்வி செல்வலலிதா (நீர்ப்பாசன இலாகா பரந்தன்), செல்வி பத்மினி (France) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு தருமராசா (Malaysia), திரு நாகராசா [சோலாலம்பூர்] திரு. துரைராசா (சிறம்பான் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு இரத்தினசாமி (தபாலதிபர் தலைமன்னார்) திருமதி பத்மாவதி (இருபாலை), திருமதி கீதா நித்தியானந்தன் (உடுவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மயூரன் நிர்த்திகா, செந்தூரன், வித்தியா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

தகவல்:
க. நித்தியராசா

'சந்திரோதயம்'
இருபாலை கிழக்கு,
கோப்பாய் (7698)

### Dr. V. R. Kumarasundaram

(Veterinary Surgeon)

Dr. V ரவீந்திரன் குமாரசுந்தரம் அவர்கள் (Institute of Fundamental Studies Kandy Formerly of North Lanka Medical College, Moolai) காலமானார். இவர் சாமினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விக்ரர் மேதர், திருமதி ரட்ணா மேதர் ஆகியோரின் அன்புமருமகனும், 46/4, முதலாம் ஒழுங்கை பருத்தித்துறை வீதியிலிருந்த காலஞ்சென்ற திரு. திருமதி குமாரசுந்தரத்தின் அன்பு மகனும், குமாரசந்திரனின் (London) அன்புச் சகோதரரும், ஜெயந்தா மேதர் (U. S A) திருமதி டிலோ ரட்ணராஜா (Nigeria), திருமதி சுவேன் ஞானேந்திரன் (Australia ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 02 - 11 - 88 புதன்கிழமை காலை 8 மணிக்கு நல்லடக்கத்திற்காக மானிப்பாய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Roy Mather

'Bonnington'
Sangarapillai Road,
Manipay (7696)

### நாகலிங்கம் ஈஸ்வரலிங்கம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சண்டிலிப்பாயை இருப்பிடமாகக் கொண்டவருமாகிய நாகலிங்கம் ஈஸ்வரலிங்கம் 31 - 10 - 88 திங்கட்கிழமை காலமானார். அன்னார் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் பூரணலிங்கம், சந்திரலிங்கம், திருமதி திருநாவுக்கரசுவின் சகோதரரும், திருமதி புவனேஸ்வரி விஜயரத்தினம் திருமதி பரமேஸ்வரி குகராஜா, திருமதி ராஜேஸ்வரி வீரசிங்கம் சத்தியமூர்த்தி, திருமதி நகுலேஸ்வரி ஜெயராஜா, செல்வி லோகேஸ்வரி, தவராஜாவின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சண்முகவாசா, சண்டிலிப்பாயில் 1 - 11 - 88 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சண்முகவாசா,
சண்டிலிப்பாய்.

தகவல்:
N. சத்தியமூர்த்தி

(7862)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 02- 11- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Wednesday 2nd November 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org